ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 7 | ஜனவரி 2002 | கானம் : 6

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India Regd. No. TN / CPMG / 156 / 2001
R. No. 62828 / 95 Licensed to Post without prepayment WPP No. 52

**வேணு : 7** | **ஜனவரி 2002** | **கானம் : 6**


## செய்திகள் தொடர்ச்சி

### டிசம்பர் 16-ந் தேதி முதல்

சென்னை ப்ரேமிகபவனத்தில் தனுர்மாதத்தை ஒட்டி காலை 4.30 மணிக்கு ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு விசேஷ பூஜை நடைபெற்றுக்கொண்டு வருகிறது. மஹாரண்யம், மதுரபுரியில் தனுர்மாத பூஜை நடைபெறுகிறது. மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு காலை 4 மணியளவில் ஆராதனை நடைபெறுகிறது.

### டிசம்பர் 19-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் க்ருத்திகா மண்டல வேத பாராயணம் நடைபெற்றது.

### டிசம்பர் 20-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் அத்யயன உத்ஸவம் நடைபெற்றது. தினமும் மாலை 6 மணி முதல் 8.30 மணி வரை திவ்யப்ரபந்தங்கள் ஸேவிக்கப்பட்டன. மதுரபுரியிலும் அத்யயன உத்ஸவம் நடைபெற்றது.

---

## மதுரமுரளி வருட சந்தா

சந்தாதாரர்கள், ‘‘மதுரமுரளி’’க்கான தங்களது வருடாந்தர சந்தாவை ‘‘குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்’’ என்னும் பெயரின், ரொக்கம் / M.O. / DD யாக ரூ.60-ஐ தங்கள் பெயர், முகவரி, சந்தா எண். தொலைபேசி எண். உள்ளிட்ட விவரங்களுடன் மிஷன் முகவரிக்கு உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

**—ஆசிரியர்**

---


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. ✆ : 4895875 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 7 ஜனவரி 2002 கானம் : 6

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | கலிஸந்தரணோபநிஷத் | 3 |
| 3. | மதுரமான மஹனீயர் - 74 | 5 |
| 4. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 8 |
| 5. | வேத கதைகள் - 55 | 11 |
| 6. | எது ஆச்சர்யம்? | 14 |
| 7. | எந்தரோ மஹானுபாவுலு - 45 | 15 |
| 8. | ஸனாதனப் புதிர் - பகுதி - 9 | 18 |
| 9. | உவமைக்கோர் கம்பநாட்டாழ்வான் - 2 | 20 |
| 10. | உத்தவனுக்கு ஸ்ரீ க்ருஷ்ணனின் உபதேசம் - தொடர்ச்சி | 22 |
| 11. | பாலகர்களுக்கு ஒரு கதை - 49 | 23 |
| 12. | பெரிய பெருமாளின் பெருங்கருணை | 26 |
| 13. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 6 - தொடர்ச்சி | 28 |
| 14. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 76 | 30 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : ப்ருந்தாவன ஸாரங்கா தாளம் : ஆதி

*பல்லவி*

***கண்ணன் எங்கள் மன்னவன்***
***ஸர்வலோக நாயகன் (கண்ணன்)***

*சரணங்கள்*

***மயிலிறகை அணிந்தவன்***
***கயிலைநாதன் பணிபவன்***
***துகிலை தந்து காத்தவன்***
***முகிலை ஒத்த மேனியன் (கண்ணன்)***

***ஈடு இணை அற்றவன்***
***வேறு துணையும் வேண்டுமோ***
***தேடி நாடி சென்று நாம்***
***ஆடி பாடி மகிழ்வோமே (கண்ணன்)***

***முரளீ கானம் என்றுமே***
***முகுந்தன் வரவை சொல்லுமே***
***சிரம் பணிந்து வணங்குவோம்***
***ஏற்றம் மிகக் கொள்ளுவோம் (கண்ணன்)***

---

*நாமாவளி*

***பகவன்நாமமே பரமசுகம்***
***அதைப் பாடபாட வரும் பரமபதம்***
***ஸ்ரீ நாராயண ஹரி நாராயண***
***ஸ்ரீ நாராயண ஹரி பகவான்***
***ஸ்ரீ ஹரி நாராயண பகவான் (பகவன் நாமமே)***

# கலிஸந்தரணோபநிஷத்

*த்வாபராந்தே நாரதோ ப்ரஹ்மாணம் ஜகாம கதம் பகவன் காம் பர்யடன் கலிம் ஸந்தரேயமிதி।*

துவாபர யுக முடிவில் நாரதர் ப்ரஹ்மாவை அணுகி, ''பகவானே! உலகைச் சுற்றிக்கொண்டே எப்படி கலிதோஷத்தை கடக்கலாம்?'' என்று வினவினார்.

*ஸஹோவாச ப்ரஹ்மா ஸாது ப்ருஷ்டோருஸ்மி ஸர்வ ஶ்ருதி ரஹஸ்யம் கோப்யம் தச்சுணு யேன கலிஸம்ஸாரம் தரிஷ்யஸி।*

''நீ கேட்டது நல்ல கேள்வி, ஸகல வேத ரஹஸ்யமும், நன்கு காக்கப்பட வேண்டியதும், எதனால் கலியின் ஸம்ஸார துன்பத்தை ஒருவன் கடக்கலாமோ அதைக் கூறுகிறேன். கேள்'' என்று ப்ரஹ்மா கூறினார்.

*பகவத ஆதிபுருஷஸ்ய நாராயணஸ்ய நாமோச்சாரண மாத்ரேண நிர்தூத கலிர்பவதி।*

''ஆதி புருஷனும், பகவானுமான நாராயணனுடைய நாம ஜபம் ஒன்றினாலேயே கலிதோஷம் முற்றும் விலகிப் போகும்'' என்றார்.

*நாரத: புன: பப்ரச்ச தன்னாம கிமிதி*

நாரதர் மீண்டும், ''அந்த நாமம் எது? என்று கேட்டார்.

*ஸ ஹோவாச ஹிரண்யகர்ப:*

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே।*

*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே॥*

*இதி ஷோடஶகம் நாம்நாம் கலிகல்மஷநாஶனம்।*

*நாத: பரதரோபாய: ஸர்வ வேதேஷு த்ருஷ்யதே॥*

''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே॥

என்ற பதினாறு நாமங்களால் கலிகல்மஷம் நாசமாகும். வேதம்

முழுவதிலும் இதற்கு மேலான உபாயம் எதுவும் காணப்படவில்லை என்று ப்ரஹ்மா கூறினார்.

*இதி ஷோட ஶகலாவ்ருதஸ்ய ஜீவஸ்யா வருணாவினாஶனம் ।*
*தத: ப்ரகாஶதே பரப்ரஹ்ம மேதாபாயே ரவிரஶ்மி மண்டலீவேதி ॥*

இதனால் பதினாறு கலைகளால் சூழப்பட்ட ஜீவனுடைய ஆவரணம் அழிந்து போகிறது. அதன் பின் மேகம் நீங்கிய ஸூரிய மண்டலத்தைப் போல் ப்ரஹ்மம் ப்ரகாசிக்கிறது.

*புனர்நாரத: பப்ரச்ச பகவன் கோகுஸ்ய விதிரிதி*

மறுபடியும் நாரதர், ''பகவானே! இந்த ஜபத்திற்கு என்ன விதி?'' என்று கேட்டார்.

*தம் ஹோவாச நாஸ்ய விதிரிதி ।*
*ஸர்வதா ஶுசிரஶுசிர்வா படன் ப்ராஹ்மண: ஸலோகதாம்*
*ஸமீபதாம் ஸரூபதாம் ஸாயுஜ்யதாமேதி ॥*

''இதற்கு விதி ஒன்றுமில்லை. சுத்தமோ அசுத்தமோ எப்பொழுதும் ஜபிக்கலாம். அதனால், ப்ராஹ்மணன் ஸாலோகம், ஸாமீபம், ஸாரூபம், ஸாயுஜ்யம் என்ற முக்தியை அடைவான் என்று ப்ரஹ்மா கூறினார்.

*யதாஸ் ஷோடஶீகஸ்ய ஸார்தத்ரிகோரிர்ஜபதி ததா*
*ப்ரஹ்மஹத்யாம் தரதி ।*
*தரதி வீரஹத்யாம் । ஸ்வர்ணஸ்தேயாத்பூதோ பவதி ।*
*பித்ரு தேவமனுஷ்யாம பகாராத் பூதோ பவதி ।*
*ஸர்வதர்மபரித்யாகா பாபாத் ஸத்ய: ஶுசிதாமாப்னுயாத் ।*
*ஸத்யோ முச்யதே ஸத்யோ முச்யதே இத்யுபநிஷத் ।*

இதை மூன்றரைக்கோடி ஜபம் செய்தால் ப்ரஹ்மஹத்தி பாவத்திலிருந்து விடுபட்டுத் தூயவனாவான். வீரஹத்தியிலிருந்து விடுபடுவான். தங்கத்தைத் திருடிய பாவத்திலிருந்து விடுபடுவான். பித்ருக்கள், தேவர்கள், மானிடர்கள் ஆகியவர்களுக்கு இழைத்த தீமையிலிருந்து விடுபடுவான். தருமங்களைக் கைவிட்ட எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு அப்பொழுதே தூயவனாவான். உடனே விடுபடுவான் என்று உபநிஷத்து கூறுகிறது. ஹரி: ஓம் தத்ஸத் ॥

## 74

நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் பல்கேரியாவில். என்னுடைய பெயர் **Daniela Nikolova**. பல்கேரியாவில் எனது பள்ளி படிப்பை முடித்துவிட்டு மேல் படிப்பிற்காக ரஷ்யா சென்று அங்கு மாஸ்கோ நகரில் **Civil Engineering** பட்டம் பெற்றுள்ளேன். நான் சிறு குழந்தையாக இருக்கும்பொழுது எனது தந்தை பல சித்திர கதைப் புத்தகங்களை பல்கேரியன் மொழியிலேயே வாங்கித் தருவார். அதில் மஹாபாரத படக்கதை புத்தகமும் ஒன்று. அதில் துரோணாச்சார்யர் தவம் புரிவது போல் இருந்தது. அதைப் பார்க்கும்பொழுதெல்லாம் எனக்கும், நாமும் இவரைப் போல் தியானம் செய்யவேண்டும் என்றும், இவர்கள் எல்லாம் வாழ்ந்த இந்தியாவிற்கு செல்லவேண்டும் என்றும் அடிக்கடி தோன்றும்.

நான் மாஸ்கோவில் இருந்த ஸமயம், ஒரு நாள், **ISKCON** இயக்கத்தினர், பல புத்தகங்களை தங்களது வண்டிகளில் வைத்து விற்பனைக்காக வீதிகளில் எடுத்து வந்தார்கள். அதில் யதேச்சையாக பகவத்கீதை புத்தகத்தை ரஷ்யன் மொழியில் வாங்கிப் படித்தேன். விடுமுறை நாட்கள் எல்லாம் **ISKCON - Moscow Centre**க்கு சென்று வந்தேன். 'ஹரே ராம' மஹா மந்திரத்தையும் சொல்ல ஆரம்பித்தேன். என்னுடைய படிப்பை முடித்தவுடன், **ISKCON** ஸ்தாபனத்திற்கு என்று ப்ரத்யேகமாக உள்ள வானொலி **Channel**ல் சேர்ந்தேன். அங்கு 6 மாதங்கள் பணி செய்தேன். அவர்கள் ஒரு 5 பேர் கொண்ட குழுவை இந்தியாவிற்கு அனுப்புவதாக இருந்தார்கள். நானும் அவர்களுடன் செல்ல ஆசைப்பட்டேன். ஆனால், என்னுடைய பெயர் அதில் இல்லை.

என்ன அதிசயம்! அந்தக் குழுவில் செல்ல இருந்த ஒருவர், கடைசியில் செல்லமுடியாத நிலையில், அவருக்கு பதிலாக நான் அனுப்பப்பட்டேன். மாயாப்பூர், பூரி, ப்ருந்தாவனம் இவைகளை

அந்தக் குழுவுடன் பார்த்தவுடன் இந்தியா எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. திரும்பிச் செல்வதற்கு மனம் இல்லை. இருந்தாலும் அவர்களுடன் மீண்டும் ரஷ்யா சென்றுவிட்டு உடனே என்னுடைய தகப்பனாரின் உத்தரவை பெற்றுக்கொண்டு மீண்டும் இந்தியா வந்துவிட்டேன். பூரியில் ஸ்வாமி ஹரிதாஸ் ஸமாதியின் அருகில் சுமார் இரண்டு வருடங்கள் வசித்தேன். பிறகு இந்தியாவில் நிரந்தரமாக தங்குவதற்காக ஜகதீஷ் என்பவரை திருமணம் செய்து கொண்டேன். நாங்கள் இருவரும் கௌடிய மடத்தைச் சேர்ந்த ஒரே குருவிடமிருந்து உபதேசம் பெற்றவர்கள். எனக்கு என்னுடைய குருநாதர் அளித்த தீக்ஷா நாமம் தீனதயாமயி என்பது. என்னுடைய தீக்ஷாகுரு 1999-ஆம் ஆண்டு சரீரத்தை விட்டுவிட்டார். நான் சில ஆண்டுகளாக ப்ருந்தாவனத்தில் வஸித்து வருகின்றேன். நான் ஜீவிதத்துடன் இருக்கும் ஒரு குருவை அடைய விரும்பினேன்.

வ்ரஜவாஸிகள் அனைவரின் இஷ்ட தெய்வம் பாங்கே விஹாரிஜி. நான் தினமும் பாங்கேவிஹாரிஜி கோவில் மற்றும் நிதி வனத்திற்கும் சென்று தரிசனம் செய்வேன். நிதிவனம்தான் கோபியருடன் பகவான் ராஸம் செய்யும் புண்ய தலமாகும். ஸூரியன் அஸ்தமித்த பின்னர் அங்கு யாரும் செல்ல முடியாது. ஒவ்வொரு இரவும் இங்குதான் ராஸோத்ஸவம் நடைபெறுகிறது. பகவான், இங்கு ராதாராணியை தானே அலங்கரிக்கிறான். இங்கு காணப்படும் மரம், செடி, கொடிகள் மற்றும் வானரங்கள் இரவில் கோபிகைகளாக மாறிவிடுகின்றன. அருகே வசிக்கும் ஸாதுக்கள், வளையல்கள், கால் கொலுசுகள் எழுப்பும் ‘‘ஜல் ஜல்’’ என்ற ஸப்தத்தையும், சிரிப்பு ஸப்தத்தையும், ராஸ நடனத்தின்பொழுது வாசிக்கப்படும் தாளத்தையும் கேட்டுள்ளனர்.

நான் வழக்கம்போல் ஒரு நாள் நிதிவனத்திற்குச் சென்றபொழுது அங்கு தென்னிந்தியாவைச் சேர்ந்த பக்தர்கள் வந்திருந்தனர். அவர்கள் ஸ்வாமி ஹரிதாஸின் ஸமாதியருகே அமர்ந்து பஜனை செய்து கொண்டிருந்தார்கள். அந்த பக்தர்களுக்கு மத்தியில் ஒருவர் அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்தவுடன் அவரிடம் எனக்கு ஒரு ஆகர்ஷணம் ஏற்பட்டது. பஜனை முடிந்தவுடன் அவர் எழுந்து

சென்றார். அவரது வித்தியாசமான நடை என் கவனத்தை ஈர்த்தது. நான் ஒரு பெண்மணியிடம் அவர் யார் என்று கேட்க, அவர், ''தென் இந்தியாவைச் சேர்ந்த ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்'' என்று பதிலளித்தார்.

மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பின்னர் நான் யமுனைக் கரையில் இருந்தபொழுது, எனது கணவர் என்னைத் தேடி வந்தார். ''நான் கடந்த 4 மணி நேரமாக உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறேன். பாகவத ஸப்தாஹம் நடத்திக்கொண்டிருக்கும் ஸ்வாமிகள் ஒருவரை நான் தரிசனம் செய்தேன். அவர் உன்னை அழைத்து வரச் சொன்னார்'' என்று கூறினார்.

ஸ்வாமிகளை தரிசிக்க நானும் என் கணவரும் அவர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றோம். ஆனால், அவர் அப்பொழுது கோவர்த்தன் சென்றிருந்தார். மறுபடியும், மாலையில் நாங்கள் ஸ்வாமிகளை தரிசிக்கச் சென்றோம். நிதிவனத்தில் நான் கண்ட அதே ஸ்வாமிகள் அங்கிருப்பதைக் கண்டு ஸ்தம்பித்துப் போனேன். அவர் என்னிடம் மிகவும் அன்பாகப் பேசினார். நான் எப்பொழுது ப்ருந்தாவனத்திற்கு வந்தேன், எதற்காக ப்ருந்தாவனத்திற்கு வந்தேன் என்றெல்லாம் விசாரித்தார். இவ்வாறு என்னுடன் பேசிக் கொண்டிருக்கையில் அவர் தனது கண்களை மூடிக்கொண்டார். என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத ஒன்றை அவர் காண்பது போல் எனக்குத் தோன்றியது.

பின்னர் அவர் என்னையும், என் கணவரையும், காத்யாயினி கோயிலுக்கு அருகே தாம் ஆஶ்ரமம் அமைக்க வாங்கியுள்ள இடத்திற்கு அழைத்துச் சென்றார். அந்த மாலைப்பொழுதில், அவருடன் சென்றபொழுது விவரிக்க முடியாத மன அமைதியை நான் அனுபவித்தேன்.

நான் பாங்கே விஹாரிஜியிடம் மீண்டும் ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டேன். ஒன்பது மாதங்களுக்குப் பின், தென்னிந்தியாவில், ப்ருந்தாவனத்தில், அவரை நான் தரிசித்தேன். நான் இவ்வாறு கூறுவதற்குக் காரணம், **''குருநாதர் இருக்கும் தலம்தானே ப்ருந்தாவனம்!''**

**– தீனதயாமயி**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : அதி ஆஶ்ரமியான மஹாத்மாக்கள் (ஜீவன் முக்தர்கள்) எத்தகைய கார்யம் செய்தாலும், அவர்களை அது பாதிக்காது. அதாவது, அவர்கள் கார்யங்கள் செய்தும் செய்யாதவர்களே என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றனவே! இந்த நிலையில் இருக்கும் மஹாத்மாக்கள் ஒருக்கால் அதர்மமான கார்யத்தில் கூட ஈடுபடக்கூடுமா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : அந்த நிலையில் இருக்கும் மஹாத்மாக்களுக்கு, தர்ம விஷயமான காரியங்களில் கூட மனதானது ப்ரவர்த்திக்காது. அப்படியிருக்கையில், அவர்கள் அதர்மமான கார்யங்களில் ஈடுபடுவார்களா என்ற கேள்விக்கு இடமேயில்லை.

*கேள்வி : அத்வைதிகள், விதையிலிருந்து மரம் தோன்றுவது போல், ப்ரஹ்மத்திலிருந்துதான் உலகம் தோன்றியுள்ளது என்றும், பாலானது தயிராக மாறுவதுபோல் ப்ரஹ்மமே உலகமாக மாறி உள்ளது என்றும் கூறுகின்றனர். விதையிலிருந்து மரம் தோன்றி விட்டால், அங்கு மரம் மட்டுமே உள்ளது. விதை இல்லை. பால் தயிராகிவிட்டால் பின்னர் தயிர் மட்டுமே உள்ளது. பால் இல்லை. அதுபோல், ப்ரஹ்மத்திலிருந்து உலகம் தோன்றியிருந்தாலோ, ப்ரஹ்மமே உலகமாக மாறியிருந்தாலோ, உலகம் மட்டும் தானே இருக்க வேண்டும். ப்ரஹ்மம் இருக்க முடியாது அல்லவா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஒரு தாயாருக்குப் பல குழந்தைகள் பிறந்தாலும், தாயாரும் இருக்கிறாள், குழந்தைகளும் இருக்கின்றன. ஒரு தீபத்திலிருந்து பல தீபங்கள் ஏற்றினாலும், மூல திபமும் அப்படியே இருக்கிறது. அதுபோல், ப்ரஹ்மத்திலிருந்து உலகம் தோன்றி இருந்தாலும், ப்ரஹ்மமே உலகமாக மாறியிருந்தாலும், ப்ரஹ்மம் இருப்பது ஸத்யம்.

*கேள்வி : தாங்கள், நாம ஸங்கீர்த்தனம்தான் மோக்ஷத்தை அடையும் வழி என்று கூறுகிறீர்கள். பல மஹாத்மாக்களும் இந்த மார்க்கத்தைத்தான் காண்பித்துள்ளனர். அப்படியிருக்க, எதற்காக வேதங்களை ரக்ஷிக்க வேண்டும்? வேதம் படிப்பதன் அவஶ்யம் என்ன?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : நமது அன்றாட வாழ்வில் எது சரி, எது குற்றம் என்பதை நிர்ணயம் செய்வதற்கு, நாம் ஒரு வக்கீலை அணுகுகிறோம். அவர், "Social Law"வினை அடிப்படையாகக் கொண்டு எது சரி, எது தவறு என்று கூறுகிறார். பகவான் இருக்கிறான் என்பதற்கு வேதமே ப்ரமாணம். பகவத் தரிசனத்தை விரும்பும் ஒருவனுக்கு அதை அடைய பின்பற்ற வேண்டிய சரியான மார்க்கத்தைக் காண்பிக்கும், "Eternal Law"தான் வேதம். எனவே, வேதம் காண்பிக்கும் மார்க்கத்தைப் பின்பற்றிதான் பகவானை தரிசிக்க முடியும். ஒருக்கால் வேதம் அழிந்துவிட்டால், எது சரி, எது தவறு என்பதை நிர்ணயிக்க ஒரு அடிப்படையே இல்லாமல் போய்விடும். பல்வேறு துர்மதங்கள் தோன்றிவிடும். குழப்பம்தான் மிஞ்சும். நாமஸங்கீர்த்தனம் கூட வேதம் காண்பித்த ஒரு மார்க்கமாக இருப்பதால்தான் நாமும் அதைப் பின்பற்றுகிறோம்.

*கேள்வி : ஒருவர் இறந்த பின்னர் மீண்டும் இந்த பூவுலகில் வந்து பிறப்பாரா அல்லது மேல் உலகங்களை அடைவாரா என்று ஸாமான்ய மனிதர்கள் அறிந்துகொள்வது எப்படி?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : இந்த பூவுலகில் நாம் காணும் ஸாமான்ய மனிதர்களிடம் இயல்பாகவே காமம், க்ரோதம், பயம், அஸூயை, பந்தம், பாசம் போன்றவை காணப்படுகின்றன. ஆனால், சிலரிடம் இந்த இயல்புகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. மஹான்களிடமோ இவை சிறிதளவுகூட காணப்படுவதில்லை. இறக்கும் தருவாயிலும் கூட ஒருவரிடம் காமம், க்ரோதம், பயம், அஸூயை, பந்தம், பாசம் போன்ற இயல்புகள் காணப்பட்டால் அவர்கள் இந்த பூவுலகில்தான் வாழ ஏற்றவர்கள். எனவே, மீண்டும் அவர்கள் பூவுலகில் பிறப்பது நிச்சயம். இந்த இயல்புகள் குறைவாக உள்ளவர்கள் அதற்கேற்ப மேல் உலகங்களை அடைவார்கள். இத்தகைய இயல்புகள் சிறிதும் காணப்படாத மஹான்களோ ப்ரஹ்மமாகவே ஆகிவிடுகிறார்கள்.

***கேள்வி : சிலர் புருவங்களுக்கு மத்தியில், மூக்கின் மேல் உள்ள ஸ்தானத்தை தியானம் செய்ய வேண்டுமென்று கூறுகிறார்கள். அதன் தாத்பர்யம் என்ன?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : ‘வரணா’ என்ற புருவங்களுக்கும், ‘நாசி’ என்ற மூக்கிற்கும் இடைப்பட்ட ஸ்தானத்திற்கு ‘வாரணாசி’ என்று பெயர். ‘வாரயதி’ என்றால் ‘தடுத்தல்’ என்று பொருள். புருவங்களுக்கு மத்தியில் உள்ள ஸ்தானத்தைத் தியானம் செய்பவரை பாபங்கள் செய்யாமல் அந்த தியானமே தடுப்பதால் புருவங்களுக்கு ‘வரணா’ என்று பெயர். மூக்கிற்கு மேலுள்ள ஸ்தானத்தை தியானம் செய்பவரின் பாபங்களை, அந்த தியானம் போக்கிவிடுவதாலேயே, மூக்கிற்கு ‘நாசி’ என்று பெயர்.

---

ஸனாதனப் புதிர் - பகுதி - 8க்கான வினாக்களுக்கு
சரியான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்.

---

**முதல் பரிசு ரூ.** 250/-

C. Krishnaswami, 23, Jambulinga Naicker Street, Chennai - 600 034.

**இரண்டாம் பரிசு ரூ.** 150/-

K.N. Karthik Bhat, Sandeepani Gurukulam, Madhurapuri Aashram, Mahanyam Village, Malaipattu P.O. Padappai.

**மூன்றாம் பரிசு ரூ.** 100/-

S. Saranathan, 10/21, Ranganathan Street, Nehru Nagar, Chennai - 600 044.

**சிறப்பு பரிசுகள் தலா ரூ.** 100/-

1. Smt. Jayanthi Raja, w/o. T.L. Raja, Saravamanya Agraharam, Terizhandur.
2. S. Venkatakrishnan, 35, Patel Street, Thenpathi, Sirkazhi - 609 111.
3. K.S. Subramanian, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 600 004.
4. P.K. Kasthuri, 25-A, 2nd Main Road, Postal Colony, West Mambalam, Chennai-33.
5. R. Balan, 3/100, Mangala, VRPS Sule Marg Wadala, Mumbai - 400 031.
6. V. Radha, 73, Keshav Smriti, 8-B, Cadell Road, Dadar, Mumbai - 400 028.

# வேத கதைகள் - 55

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## அந்தர்யாமி

ஜனகருடைய ஸபையில் யாஜ்ஞவல்க்யருக்கும் பல ப்ராஹ்மணர்களுக்கு விவாதம் ஏற்பட்டது. ப்ராஹ்மணர்கள் கேட்ட வினாக்களுக்கு யாஜ்ஞவல்க்யர் இடையே தகுந்த பதிலை அளித்தார். அப்பொழுது அருணர் என்பவருடைய பிள்ளையான உத்தாலகர் என்பவர் யாஜஞவல்க்யரிடம் ஒரு வினா எழுப்பினார். இந்த உத்தாலகர் குருபக்தி உள்ளவர். இவர் குரு குலத்தில் நித்யாப்யாஸம் செய்து வந்தார். அந்த குருவிற்கு நஞ்சை நிலங்கள் நிறைய இருந்தன. அவர் விவசாயமும் செய்து வந்தார். மழைக் காலத்தில் மடை வழியாக வயலுக்குள் நீர் நிறைய புகுந்தது. இதனால் பயிர்கள் முழுகின. உடனே உத்தாலகரை அழைத்து மடையை அடைப்பாயாக என்று உத்தரவிட்டார். உத்தாலகரும் உடன் சென்று மடையை அடைக்க முயன்றார். நீர் பெருக்கு அதிகமாக இருந்ததால் இவரால் மடையை அடைக்க முடியவில்லை. இந்த உத்தாலகர் பருத்த உடல் உள்ளவர். எந்த விதத்திலும் மடையை அடைக்க முடியாதபோது தானே மடைபகுதியில் குறுக்காக படுத்துவிட்டார். மடையும் அடைந்தது. தான் மடைப் பகுதியிலிருந்து எழுந்தால் வயலுக்குள் நீர் சென்று விடும் என்று இரவு முழுவதும் மடையில் படுத்துக் கிடந்தார்.

சிஷ்யனை காணாத குருவானவர் விடிந்ததும் மடைப் பகுதிக்குச் சென்று. உத்தாலகா என்று அழைத்தார். இவரும் தண்ணீரை பிளந்து கொண்டு வெளிவந்தார். இவ்விதம் உணவு, உறக்கமின்றி விரைத்த உடலுடன் மடைப்பகுதியை அடைத்ததால் தான் இவருக்கு உத்தாலகர் என்று பெயர் ஏற்பட்டதாக வரலாறு.

''ஓ, யாஜ்ஞவல்க்யரே. நாங்கள் ஒரு ஸமயம் மத்ர தேசத்தில் ஸஞ்சாரம் செய்து வந்தோம். அங்கு கபி கோத்ரத்தில் பிறந்த பதஞ்சலர் என்பவருடைய வீட்டில் ஶாஸ்த்ராத்யயனம் செய்து

கொண்டிருந்தோம். அவருடைய மனைவியை பிசாசு பிடிப்பது போல் கந்தர்வன் பிடித்திருந்தான். நீ யார் என்று நாங்கள் அவனை கேட்டோம். அவன், ''அதர்வா என்பவரின் பிள்ளை. கபந்தன் என்று பெயர்'' என்று கூறினான். அவன் எங்களைப் பார்த்து அந்தர்யாமி என்பவரை உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டான். எங்களுக்கு தெரியவில்லை. எங்களுக்கு உபதேசிக்குமாறு நாங்கள் அவனை கேட்டுக் கொண்டோம். அவனும் எங்களுக்கு உபதேசித்தான். இவ்விதம் எவருக்கும் தெரியாத அந்தர்யாமியை நாங்கள் அறிந்து கொண்டு இருக்கிறோம். அந்த அந்தர்யாமியின் தத்வமானது உமக்கு தெரியுமா என்று யாஜ்ஞவல்க்யரை பார்த்து உத்தாலகர் கேட்டார்.

யாஜ்ஞவல்க்யர் பதில் கூறினார். இவ்வுலகில் இருந்துகொண்டு உலகிற்கு அப்பாற்பட்டவனாகவும் எவர் இருக்கிறாரோ, அவர் தான் அந்தர்யாமி என்று பெயர். அவரை இந்த உலகம் அறியவில்லை. உலகமே அவருக்கு உடலாக உள்ளது. அவர்தான் எல்லாவற்றையும் ஆட்டி வைக்கிறார். அவரின்றி ஒரு அணுவும் அசையாது. ஒரு ஜீவன் தனக்குள் இருக்கிற அந்தர்யாமியால் எவ்விதம் ஏவப்படுகிறானோ அவ்விதம்தான், ஜீவன் கார்யங்களைச் செய்ய முடியும். எல்லா புலன்களையும் அவன் தான் இயக்குகிறான். அவன் இயக்காவிடில் கண் முதலிய எல்லா புலன்களும் ஒரு கார்யமும் செய்யமுடியாது. இதற்கு உதாரணமாக மஹாபாரதத்தில் ஒரு வரலாறு கூறப்பட்டுள்ளது.

குருபாண்டவ போருக்கு முன் ஸமாதான தூதுவனாக ஸ்ரீ க்ருஷ்ணன் அஸ்தினாபுரம் சென்றான். த்ருதராஷ்ட்ரன் அவையில் பஞ்ச பாண்டவர்களுக்கு ஐந்து க்ராமங்களாவது அளிக்குமாறு கெஞ்சினான் ஸ்ரீ க்ருஷ்ணன். துரியோதனன் தரமாட்டேன் என்று கூறிவிட்டான். பிறகு க்ருஷ்ணன் தனித்து இருக்கும்பொழுது க்ருஷ்ணனை தனிமையில் துரியோதனன் சந்தித்தான். ஓ, க்ருஷ்ணனே, நடு ஸபையில் பஞ்ச பாண்டவர்களுக்கு ராஜ்யம் அளிக்குமாறு கேட்கிறாய். நீ என் உள்ளத்தில் அந்தர்யாமியாக அமர்ந்து பஞ்சபாண்டவர்களுக்கு ராஜ்யத்தை அளிக்காதே என்று கட்டளையிடுகிறாய். இதில் நான் எதை நம்புவது. கொடு என்பதை நம்புவதா, கொடுக்காதே என்ற வார்த்தையை நம்புவதா. இருவிதமாகவும் நீ தான் கட்டளையிடுகிறாய். (ஜானாமி தர்மம் நசமே ப்ரவ்ருத்தி: ஜானாம்யதர்மம் நசமே நிவ்ருத்தி:। கேனாபி

தேவேன ஹ்ருதி ஸ்திதேன யதா நிபுக்தோஸ்தி ததா கரோமி ॥) தர்மத்தை நன்கு அறிகிறேன். ஆனால் அதில் ஈடுபாடு இல்லை அதர்மத்தையும் நன்கு அறிகிறேன். அதில் ஈடுபாடு ஏற்படுகிறது. இவ்விதம் உள்ளத்தில் உள்ள ஒருவனால் எவ்விதம் ஏவப்படுகிறேனோ அவ்விதம் செய்கிறேன் என்று கூறினான்.

உள்ளத்தில் உள்ள ஒரு தேவன் தான் அந்தர்யாமி எனப்படுகிறான். இவ்விதம் துருவனுக்கு பகவான் தரிசனம் அளித்தபோது துருவன் பகவானை துதிக்க விரும்புகிறான். ஆனால் அவன் வாயிலிருந்து ஒரு சொல்கூட வெளி வரவில்லை. அப்பொழுது பகவான் வேத ஸ்வரூபமான தன் சங்கினால் அவன் கன்னத்தில் தொட்டார். உடன் பன்னிரண்டு ஸ்லோகங்களால் பகவானை துதித்தான். அதில் முதல் ஸ்லோகத்தில் துதிக்கும்படி சொற்களை வெளிவரச் செய்த பகவானுக்கு நமஸ்காரம். இது புராணத்தில் உள்ள அந்தர்யாமியின் தத்வம். ப்ருஹதாரண்ய கோபநிஷத்தில் உள்ளதுதான் வெளி வந்துள்ளது. நாம் உண்ணும் உணவும் அந்தர்யாமிக்கு தான் அர்பணம் செய்கிறோம். வைஷ்ணவர்கள் ஆஹாரம் செய்தீர்களா என்று கேட்க மாட்டார்கள். அந்தர்யாமி ஆராதனம் ஆயிற்றா என்று தான் கேட்பார்கள்.



ஸ்ரீ ஸாந்திப்பனியும் அவரது மனைவியும்
ஸ்ரீ க்ருஷ்ணனின் லீலைகளை வியக்கின்றனர்.

# எது ஆச்சர்யம்?

பகவான் ஸ்ரீ க்ருஷ்ணர், ஸாந்தீபனி குருகுலத்தில் வித்யாப்யாஸம் செய்து முடித்த பின்னர், குருவிடம், ''நான் தங்களுக்கு என்ன தக்ஷிணை கொடுக்கவேண்டும்?'' என்று கேட்டார். அதற்கு குருவானவர், 12 வருடங்களுக்கு முன்பு ஸமுத்ரத்தில் மூழ்கி இறந்த தனது புதல்வனை மீட்டுத்தரும்படி கூறினார். பகவானும் ஸமுத்ரராஜாவிடம் சென்று அந்த பாலகனை ஒப்படைக்கும்படி ஆணையிட, ஸமுத்ரராஜா பகவானிடம் சரணடைந்து, தான் அந்த பாலகனை யமலோகத்திற்கு அனுப்பிவிட்டதாகக் கூறினான். பகவான் யமலோகம் சென்று பாலகனைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி யமனிடம் கூறினார். யமதர்மராஜா, ''அந்த பாலகனுடைய ஆயுட்காலம் முடிந்துவிட்டதால் அவனை அழைத்து வந்துவிட்டேன்'' என்று கூறினார்.

பகவான் ஸ்ரீ க்ருஷ்ணர், ''மச்சாஸன புரஸ்க்ருத:'' (இது எனது கட்டளை!) என்று கூறி, பாலகனை மீட்டு வந்து, தனது குருவிடம் ஒப்படைத்தார். குரு ஸாந்தீபனி மிகவும் ஆச்சரியத்துடன் தனது பத்னியிடம், பகவான் பாலகனை மீட்டுவந்த செய்தியைக் கூறினார்.

அவரது பத்னியோ சிறிதும் ஆச்சரியப்படாமல், ''க்ருஷ்ணனின் ப்ரபாவத்தைத் தாங்கள் இப்பொழுதுதான் அறிந்துள்ளீர்கள். நான் அவனது ப்ரபாவத்தை முன்பே அறிவேன். நான் அவனிடம் பால் கறந்துவரும்படி கூறுவேன். அப்பொழுது பாத்திரம் தானாகவே பசுவின் மடியருகே நகர்ந்து செல்லும். பின்னர் பசு தானாகவே பால் கறக்கும். இது ஒன்று மட்டும் அல்ல. இதுபோல் பல அதிசயங்களை நான் பார்த்துள்ளேன். அவன் நான் இதை எல்லாம் கவனிக்கவில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிறான்'' என்று கூறினாள்.

அதைக்கேட்ட ஸாந்தீபனி குரு, ''க்ருஷ்ணன் நமது புதல்வனை மீட்டு வந்தது கூட எனக்குப் பெரிய அதிசயமாகத் தெரியவில்லை. இவைகளையெல்லாம் கண்ட பின்னும் இது நாள்வரை நீ இவற்றைப் பற்றி எல்லாம் ஒன்றும் சொல்லாமல் இருந்தததுதான் பெரிய அதிசயம்!'' என்று கூறி வியந்தார்.

**– ஆ. பாக்யநாதன்**

# எந்தரோ மஹானுபாவுலு - 45

ஹரிக்ராமம் என்றொரு ஊரில் ஓர் நிகழ்ச்சி நடந்தது. ஹரிநிதி என்ற பண்டிதன், ஹரிதாஸ் அனவரதமும் மஹாமந்திர ஜபம் செய்வதைக் கண்டு ஆத்திரமடைந்து, ''முஸ்லீமான இவன் பகவந்நாம ஜபம் செய்ய அதிகாரி இல்லை. இவனை பக்தன் என்று பூஜிப்பவர்களும் பாபிகள். ஶாஸ்த்ரப்படி பூஜிக்கத் தகாதவர்களை பூஜிக்கும் இடத்தில் துர்பிக்ஷம், மரணம், பயம், தாரித்ரீயம் போன்றவைகள் விளையும்'' என்று கூறினான். மேலும் ஹரிதாஸரிடம், ''நீ ஜபம் செய்வதை நிறுத்து. உன்னுடைய நடத்தையால் நாட்டுக்குத் தீங்கு விளையும்'' என்றும் சொன்னான்.


ஹரிதாஸர், ''ப்ராஹ்மண ச்ரேஷ்டரே! எனக்கு ஶாஸ்த்ர மர்மமெல்லாம் தெரியுமா? ஆனால், உங்களைப் போன்ற பண்டிதர்கள் மூலம் வேத ஶாஸ்த்ர அத்யயனம் செய்யத்தான் ப்ராஹ்மணர்களைத் தவிர வேறு யாருக்கும் அதிகாரம் இல்லை எனச் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால், பகவன் நாமத்தைக் கூறுவதால் கிராதன், ஹூணன், புளிந்தன், ஆபீரன், யவனன் போன்ற தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர்களும், காட்டுவாஸிகளும் கூட புனிதமடைந்து விடுவார்கள் என பாகவதம் கூறுகிறதென்றும் கேட்டிருக்கிறேன்'' என்றார். (ஸ்ரீமத் பாகவதம் - 2/4/18)

*கிராதஹூண ஆந்த்ர புளிந்தபுல்கஸா*
*ஆபீர கங்காயவனா: கஸாதய: ।*
*யேऽன்யே ச பாபா யது பாஶ்ரயாஶ்ரயா:*
*ஶுத்யந்தி தஸ்மை ப்ரப விஷ்ணவே நம: ॥*

ஹரிதாஸின் ஶாஸ்த்ர ஸம்மதமான இந்த பதிலைக் கேட்டதும் பண்டிதர், ''சரி. பகவன் நாமத்திற்கு வேண்டுமானால் யாருக்கும் அதிகாரம் இருக்கலாம். ஆனால், இப்படி உரக்க உரக்கச் சொல்லுவதால் என்ன லாபம்? ஶாஸ்த்ரங்களில் மானஸிக, உபாம்சு, வாசிக என மூன்று வித ஜபம் கூறப்பட்டுள்ளன. அவற்றில் மானஸிக ஜபத்தைத்தான் ஶ்ரேஷ்டமாகச் சொல்லியிருக்கிறது. நீ செய்யும் ஜபம் ''வைகரி'' என்னும் ரகத்தைச் சேர்ந்தது. அதை மிகவும்

நீசமானது என்று சொல்வார்கள். மனதுக்குள் ஜபம் செய்து கொள்'' என்றார். ஹரிதாஸரும் வினயமாக தலைவணங்கி, ''மஹராஜ்! எனக்கு ஸ்வயமாக ஒன்றும் தெரியாது. குருதேவர் அத்வைதாசார்யரின் முக கமலத்திலிருந்து சிறிது ஶாஸ்த்ர ரஹஸ்யங்களைக் கேட்டிருக்கிறேன். நீங்கள் கூறிய மூன்று வித ஜபங்களிலும் ஶ்ரேஷ்டமான மானஸிக ஜபம், விதிவத்தாக குருவிடமிருந்து தீக்ஷை பெற்ற மந்திரத்திற்குத்தான். அதை ரஹஸ்யமாகவும் ஶாஸ்த்ர விதிப்படியும் பவித்ரமான அவஸ்தையிலும் தான் ஜபிக்க வேண்டும். அவற்றை மற்றவர்கள் முன் ப்ரகடனம் செய்யக் கூடாது என்ற நியமம் உண்டு.

ஆனால், பகவன்நாமத்திற்கு ஶாஸ்த்ரங்களின் எந்த விதியும் கூறப்படவில்லையே! ஸர்வகாலமும், ஸர்வஸ்தானத்திலும், அனைவருக்கும் முன்பும் எந்த நிலையிலும் நாம ஜபம் செய்யலாம் என்றல்லவோ கூறியிருக்கிறார்கள். அன்ய மந்த்ரங்களை மெதுவாக ஜபிப்பதால் மஹிமை ஏற்படும் என்றால், பகவன்நாமத்தையோ, உரக்க உச்சாரணம் செய்வதுதான் ஶ்ரேஷ்டம் என்றுதானே அதற்கு மஹாத்மியம் கூறுகிறது. ஏனென்றால் மெதுவாக நாமம் சொல்பவன் தன்னைத்தான் பாவனமாக்கிக் கொள்கிறான். ஆனால் உரக்கக் கூறுபவன் கேட்பவர்கள் அனைவரையும், ஏன் ஜட வஸ்துக்களையும் கூட, பாவனமாக்குகிறானே!'' என்றார்.



பண்டிதரும் விடாமல், ''இதெல்லாம் வெறும் அர்த்தவாதம்'' நாமஜபத்தாலேயே அனைவரும் உத்தாரணம் செய்யப்படுவார்கள் என்றால் பிறகு இத்தனை ஶாஸ்த்ரங்கள் ஏன் உண்டாயின? பகவன் நாமத்தில் ஶ்ரத்தை வரவேண்டுமென்பதற்காகதான் இப்படிக் கூறுகிறார்களே தவிர, தெய்வீக ஸம்பத்து இல்லாமல் நாமஜபம் செய்தால் என்ன பிரயோஜனம் என்று கேட்டார். ஹரிதாஸரும், ''பண்டிதரே! நீங்கள் கூறும் உயர்ந்த ஶ்ரத்தை ஏற்படுவது கடினம்தான். ஆனால், பகவன்நாமத்தை மட்டும் பூர்ண ரூபமாக ஶ்ரத்தையுடன் ஜபம் செய்தால் ஶாஸ்த்ரங்களுக்கு அவஶ்யமே இல்லை. ஏனென்றால், ஶாஸ்த்ரங்கள் எப்போதும் பகவானை நம்பு, போற்று என்றுதானே கூறுகின்றன. இந்த ஶ்ரத்தையை வளர்ப்பதற்குத்தான் ஶாஸ்த்ரங்கள் ஏற்பட்டுள்ளன'' என்று சொன்னார்.

ப்ராஹ்மணருக்கு மேற்கொண்டு பேச முடியவில்லை. ஆவேசமாக, ''பகவன்நாம ஜபத்தாலே எல்லாம் கிடைத்துவிடுமாகில் நான் என் காது, மூக்கு இவற்றை வெட்டிக் கொள்கிறேன்'' என்று சபதம் செய்தார். ஹரிதாஸர், ''உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் சரி. என்னுடைய விஶ்வாசத்தைத்தான் நான் உங்களிடம் சொன்னேன்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார். சிறிது நாட்களிலேயே அந்த ப்ராமணருக்கு பீனஸம் என்ற சளி ஸம்பந்த ரோகம் ஏற்பட்டு மூக்கு அழுகி அழுகி விழுந்தே விட்டது. பகவான் நாமத்தை விரோதிப்பதால் ஏற்படும் தசையை பற்றிக் கூறவே முடியாது. நமது அனைத்து துக்கங்களுக்கும் ஒரே மூல காரணம் பகவன்நாமத்தில் நமக்கு இருக்கும் அஶ்ரத்தைதான்.

இவ்விதம், ஹரிதாஸர் கங்காதீரத்தில் வசித்துக்கொண்டு பகவன்நாம மஹாத்மியத்தை ஸ்தாபிதம் செய்து வந்தார். மஹாப்ரபு என்ற சந்த்ரோதயம் ஆனதும் அந்த பூர்ணசந்திரனின் குளுமைக் குடையின் கீழ், நவத்வீபத்திற்கு வந்து வசிக்கலானார். ப்ரபுவுக்கு அந்தரங்க பக்தராகத் திகழ்ந்தார். மஹாப்ரபு இவரை மிகவும் விரும்பி ஆதரித்தார். இரவு முழுவதும் மஹாப்ரபுவுடன் நாம ஸங்கீர்த்தனத்தில் கலந்துகொண்டு தன்னை மறந்து நர்த்தனம் ஆடி மூர்ச்சித்து விழுவார். பக்த ஶிரோன்மணியான ஹரிதாஸரது ஸ்மரணமே நாம நிஷ்டையை நமக்குப் பெற்றுத் தருமன்றோ! (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸனாதனப் புதிர் - பகுதி - 9

தொகுப்பு : **"ஆத்ரேயன்",** சென்னை.

1. த்ருதராஷ்ட்ரனுக்கும், காந்தாரிக்கும் பிறந்த நூறு குழந்தைகளின் பெயர் மஹாபாரதத்தில் எங்கு தரப்பட்டுள்ளது?
2. பகவான் க்ருஷ்ணன் மஹாபாரதத்தில் முதன்முதலில் இடம் பெறுவது எங்கு?
3. பகவான் க்ருஷ்ணனை அம்பினால் அடித்த வேடனின் பெயர் என்ன? இந்த நிகழ்ச்சி எங்கே நடந்தது?
4. பரீக்ஷித்தின் மனைவியின் பெயர் என்ன?
5. சகதேவனின் மற்றொரு மனைவியின் பெயர் என்ன? பிள்ளையின் பெயர் என்ன?
6. மௌத்கல்ய மகரிஷியின் மனைவி யார்?
7. ரகுகணன் எந்த நாட்டு அரசன். அவனது பல்லக்கை சுமப்பதற்கு வழியில் யாரை அழைத்தார்கள்?
8. அஜாமிளான் எந்த தேசத்தில் வசித்து வந்தான். அவனுக்கு தாசிமூலம் எத்தனை குழந்தைகள் பிறந்தன. கடைசி பிள்ளையின் பெயர் என்ன?
9. யமனுடைய தலை நகரத்தின் பெயர் என்ன?
10. பாகவத தர்மத்தை நன்கு அறிந்த பன்னிருவர்கள் யார்?
11. ஹிரண்யகசிபுவிற்கு எத்தனை பிள்ளைகள். அதில் முக்கியமானவர் யார்?
12. ஶ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம்-அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்மநிவேதனம் என்ற உரையாடல் யார் யாருக்கு சொல்லுகிறார்கள். அது எங்கு இடம் பெறுகிறது?

ஸனாதனப் புதிர் பகுதி - 9க்கான பதில்களை
ஜனவரி 25-ந் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

## ஸனாதனப்புதிர் - 8-க்கான பதில்கள்

1. தர்மபுத்திரர்
2. தேவிகா, யௌதேயா
3. விருஷசேனன் - அர்ஜுனன்
4. யுதிஷ்ட்டிரர் அஸ்வமேதம் யாகம் செய்யும்பொழுது, விருகாஸுரன் காந்தார நாட்டு அதிபதி அர்ஜுனனிடம் போர் செய்ய, அர்ஜுனன் தோற்கடித்தான்.
5. சாருமதி, க்ருதவர்மா
6. துரோணாசார்யர், அஸ்வத்தாமா, க்ருபாசார்யர், கர்ணன், க்ருதவர்மா, ப்ரஹத்பலன்
7. சதானீகன், அஸ்வமேததத்தன்
8. சித்திராங்கதாவிற்கும், அர்ஜுனனுக்கும் பிறந்த குழந்தை. மணிப்புரம் நாட்டு இளவரசர். இவர் மஹாபாரதப் போரில் கலந்துகொள்ளவில்லை.
9. பீமசேனனுடைய இன்னொரு பெயர்.
10. சந்தனு மஹாராஜாவின் சகோதரரான பஹுலிகனுடைய பேரன். 12ம் நாள் போரில் சாத்யகியைக் கொல்லப் போகும் தருணத்தில் அர்ஜுனன் பூரிஸ்சிரவஸ்ஸின் வலது கையைத் துண்டிக்க இதை எதிர்த்து சமாதி நிலையில் இருக்கும் பொழுது சாத்யகி பூரிஸ்சரஸ்ஸின் தலையை துண்டித்தான்.
11. திருஷ்டகேது பாரதப் போரில் பாண்டவர்களுக்காகப் போர் செய்து உயிரைவிட்டார். இவரது சகோதரியை யுத்தத்திற்குப் பிறகு நகுலன் மணந்தான்.
12. வபுஷ்தா
13. வைசம்பாயனரால் ஜனமேஜயனுக்கு
14. ஜயத்ரதன் - துரியோதனுடைய தங்கையான துச்சலையின் கணவன்.

# உவமைக்கோர் கம்ப நாட்டாழ்வான் - 2

சென்ற இதழில், சுபாகுவும், மாரீசனும், விச்வாமித்ரன் நடத்த இருக்கும் வேள்விக்கு இடையூறு விளைவிப்பதை, தவம் செய்பவர்களுக்கு இடையூறாக விளங்கும் காமம், வெகுளி போன்றவற்றுடன் ஒப்பிட்டு பாடியதைப் பார்த்தோம். இப்பொழுது, வேள்வி துவங்கி நடந்துகொண்டிருக்கிறது. ராமனும், லட்சுமணனும் அந்த வேள்விக்கு எந்த இடையூறும் வராதபடி காத்துக் கொண்டிருக்கின்றனர். அப்பொழுது விச்வாமித்ரன் எதிர்பார்த்தது போலவே தாடகை என்ற கரிய நிறமுடைய அரக்கி பெரிய பெரிய கற்களை கைகளினால் எடுத்து வீசுகின்றாள். தன்னுடைய அம்பு மழையினால் வீரனாகிய ராமன் கற்களை விலக்கினான்.

ராமபிரானோ விச்வாமித்ரனின் உத்தரவுக்காக காத்திருக்க, விச்வாமித்ரனோ ஒருக்கால் ராமபிரான், இவள் அரக்கியானாலும் பெண்ணாக இருப்பதால் இவளை அழிக்க தயங்குகிறானோ என்று நினைத்து, ''இவள் பெண்ணாயிருந்தாலும் பெண்மைக்குரிய குணங்கள் இல்லாதவள். கொடூரமான ஸ்வபாவமுடையவள், ஆகவே, இவளை அழிப்பது தகும்'' என்று கூறினார்.

*ஐயன் அங்கு அது கேட்டு, 'அறன் அல்லவும்*
*எய்தினால், ''அது செய்க!'' என்று ஏவினால்,*
*மெய்ய! நின் உரை வேதம் எனக் கொடு*
*செய்கை அன்றோ! அறம் செயும் ஆறு' என்றான்.*

அதைக் கேட்ட ராமபிரான், ''தாங்கள் எனக்கு இத்தகைய விளக்கங்கள் அளிக்கத் தேவையில்லை. இது செய்க என்று கட்டளையிட்டால் போதும். நீங்கள் சொல்வது அறம் அல்லாததாக இருந்தாலும் அதை வேத வாக்காக எடுத்துக்கொண்டு செய்து முடிப்பேன். அப்படி செய்வதுதான் என்னுடைய அறம்'' என்று கூறினான். வால்மீகி ராமாயணத்தில் தாடகை கையில் ஆயுதம் எதுவும் ஏந்தி வரவில்லை. ஆனால், கம்ப ராமாயணத்தில் தாடகை கையில் சூலத்தோடு வருகின்றாள். மேலும், ராமபிரான் அடித்த பாணத்தின் அழகை இங்கு கம்பநாட்டாழ்வார் வர்ணிக்கின்றார்.

*சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம், கரிய செம்மல்*
*அல் ஒக்கும் நிறத்தினாள் மேல்விடுதலும், வயிரக் குன்றக்*
*கூர் ஒக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று, கல்லாப்*
*புல்லார்க்கு நல்லோர் சொன்னபொருள் எனப் போயிற்று அன்றே!*

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

என்கின்றார் வள்ளுவரும்.

மனிதர்களுக்கே கடுமையாகப் பேசுவது என்பது இயல்பு. அதுவும் கோபவசப்பட்ட மனிதர்களின் பேச்சை கேட்கவே வேண்டாம். அதிலும், மனதை அடக்கிய முனிவர்களுக்கு கோபம் வந்து அவர்கள் கடுஞ்சொற்களை ஒருவரைப் பார்த்து கூற ஆரம்பித்தால் அவரை அது எப்படி பாதிக்குமோ, அப்படி பாதித்தது ராமபிரான் தாடகை மேல் செலுத்திய அம்பு என்கின்றான் கம்பன். அம்பு யார் மேல் எய்தப்பட்டதோ அது அவர்களின் சரீரத்தையும் பாதித்து, மனதையும் வேதனைக்குள்ளாக்கும்.

இங்கு முனிவர்களுடைய கடுஞ்சொற்கள் உதாரணமாக எடுக்கப்பட்டதற்கு காரணமென்ன? சாதாரணமான மனிதர்கள் கடுஞ்சொற்களைச் சொன்னார்களேயானால், அது ஒருவருடைய மனதை மட்டுமே வேதனைப்படுத்தும். ஆனால், முனிவர்கள் கூறும் கடுஞ்சொற்களோ அப்படியே நடந்துவிடும். ஆகவே, அது மனதை மட்டும் அல்லாமல் வாழ்க்கையையோ அல்லது சரீரத்தையோ கூட பாதித்துவிடும். ஆகவே, முனிவர்களின் கடுஞ்சொற்கள் போல பாய்ந்தது என்கின்றான் கம்பன். மேலும் இதற்குமேல்தான், கம்பனுடைய உவமை அழகை பார்க்க வேண்டும். ராமர் அடித்த பாணம் தாடகையை துளைத்து ஒரு க்ஷணம் கூட அவளின் உடம்பில் தங்காது உடனே வெளி வந்துவிட்டதை கூறுவதற்கு ஒரு அழகான உவமையை கையாள்கின்றான். அது என்ன உவமை? கல்லாத புல்லர்களுக்கு சான்றோர்கள் எத்தனைதான் அறிவுரை சொன்னாலும், அது அவர்களின் உள்ளே சென்று ஒரு கணம் கூட தங்காமல் எப்படி சென்ற மாத்திரத்திலேயே வெளியே வந்துவிடுமோ அப்படி வெளி வந்துவிட்டது என்று கூறுகின்றான். இவ்வளவு அழகான உவமை கம்பனைத்தவிர யாருக்குத்தான் தோன்றும்.

# உத்தவனுக்கு ஸ்ரீ க்ருஷ்ணனின் உபதேசம்

**- சென்ற இதழ் தொடர்ச்சி**

உத்தவன் : யார் பந்து?

ஸ்ரீ க்ருஷ்ணன் : குருவான நானே பந்து.

உத்தவன் : எது வீடு?

ஸ்ரீ க்ருஷ்ணன் : மனுஷ்ய தேஹமே வீடு.

உத்தவன் : எவன் அனைத்தும் உடையவன்?

ஸ்ரீ க்ருஷ்ணன் : எல்லா உத்தம குணங்களும் உள்ளவனே அனைத்தையும் உடையவன்.

உத்தவன் : எவன் ஒன்றுமே இல்லாத தரித்திரன்?

ஸ்ரீ க்ருஷ்ணன் : த்ருப்தி இல்லாதவனே தரித்திரன்.

உத்தவன் : யார் க்ருபணன்? (க்ருபணன் - துக்கித்தவன் அல்லது தீனன், மெலிந்தவன்)

ஸ்ரீ க்ருஷ்ணன் : இந்திரியங்களை அடக்காதவனே க்ருபணன்.

உத்தவன் : யார் தலைவன்? (ஈஃப்வரன்) (ஸ்வதந்திரன்)

ஸ்ரீ க்ருஷ்ணன் : விஷயங்களில் பற்றற்றவனே (தலைவன்) ஈஃப்வரன்.

உத்தவன் : யார் அடிமை?

ஸ்ரீ க்ருஷ்ணன் : விஷய சுகங்களில் பற்றுடையவன் அடிமை.

இவ்வாறு உத்தவனிடம் பதில்களைக் கூறிய க்ருஷ்ணன், மேலும் உத்தவனிடம் ''உத்தவா! பிறருடைய குண தோஷங்களை ஸ்மரிப்பது தோஷம். குணம், தோஷம் இரண்டையும் பார்க்காமல் விடுவது குணமாகும்'' என்றும் கூறினான்.

**- முற்றும்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 49

முன்னொரு காலத்தில் சித்தூர் என்னும் ஓர் அழகிய ஊர் இருந்தது. அங்கு பலதரப்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். அந்த ஊரில் கோபாலன் எனும் சிறுவன் அவன் தாய், தந்தையரோடு வாழ்ந்து வந்தான்.

சிறு வயதிலிருந்தே கோபாலன், தன் வயதை ஒத்த மற்ற சிறுவர்களைப் போல் அல்லாது, தனித்து விளங்கினான். அவனுக்கு பொறுமை என்பது பிறவிக் குணமாக இருந்தது. யார் அவனை ஏதோ ஒரு விஷயமாக கடிந்து கொண்டாலும், அவன் பதிலுக்கு கோபப்படவே மாட்டான். கல்வியிலும் அவன் சிறந்து விளங்கினான்.

அவனை ஒத்த சிறார் அனைவரும் அவனது தெருவில் உள்ள ஓர் மைதானத்தில் கூடி விளையாடுவது வழக்கம். கோபாலன் மிகவும் நன்றாக விளையாடுவான். அவன் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் சரண் என்றொரு பையன் இருந்தான். அவனுக்கு ஒரு கால் ஊனம் என்பதால், அவனால், மற்ற சிறுவர்களுடன் விளையாடப் போக முடியாது. கோபாலனோ, அந்த சிறுவனுடன் மாலைநேரம் அவன் வீட்டிற்குச் சென்று, அவனோடு சேர்ந்து, அந்த சிறுவனால் விளையாட முடிந்த விளையாட்டை விளையாடி, சரணை மகிழ்வித்து வருவான். கோபாலனின் பெற்றோர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும், கோபாலன் மைதானத்துக்குச் சென்று விளையாடுவதாக இல்லை.

ஒருநாள் கோபாலனின் வீட்டிற்கு ஒரு வயதான பிச்சைக்காரன் வந்தான். கோபாலனின் தாய், தந்தையர் அந்த பிச்சைக்காரனுக்கு யாதொன்றும் கொடாது, அனுப்பி விட்டனர். கோபாலனின் தாய், தந்தையர்கள் ஒன்றும் கெட்டவர்களில்லை. பிச்சைக்காரனிடம் ஓரளவே அவர்கள் இரக்கம் மனதால் காட்டினர். இதைக் கண்ட கோபாலனோ அந்த பிச்சைக்காரன் பின்னே சென்று, அவனுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு, அவனுக்குத் தேவையானதை தனது வீட்டிலிருந்தே மிகுந்த மகிழ்ச்சியோடு கொடுத்தான்.

மற்றொரு நாள், கோபாலனின் தந்தை அவனை ஒரு பொம்மை கடைக்கு அழைத்துச் சென்றார். அது நவராத்திரி ஸமயம்.

கடையில் நிறைய பொம்மைகள் இருந்தன. வேல் வைத்த முருகன், மோதகம் வைத்த கணபதி, தவழும் கண்ணன் என்று குழந்தைகள் வாங்கிச் சென்று கொண்டிருந்தனர். கோபாலன் மட்டும் அதில் ஒரு கை ஒடிந்த நடமாடும் சிறுவனின் பொம்மையைக் காட்டி தன் தந்தையை வாங்கித் தரும்படி சொன்னான். அவன் தந்தை எவ்வளவு சொல்லியும் கோபாலன் கேட்கவில்லை. பிடிவாதமும், அன்பும் கலந்து அதையே வாங்கிக்கொண்டான். அந்த கடைக்காரன் ஆச்சரியமடைந்தான்.

பிறிதொருநாள், ஒரு நெடுந்தூரப் பயணத்தை கோபாலனும், அவன் தாய், தந்தையரும் மேற்கொண்டனர். விடியற்காலையிலேயே, அவர்கள் ஒரு பேருந்தைப் பிடித்து, ஸ்ரீரங்கம் சென்று கொண்டிருந்தனர். பேருந்து கிளம்பி ஒரு மணி நேரம் கழித்து, ஓரிடத்தில் பயணிகளை ஏற்றுவதற்காக நின்றது. ஒரு வயதான கிழவி ஏறினாள். கோபாலனும் அவன் தாய், தந்தையரும் மூவர் உட்காரும் சீட்டில் உட்கார்ந்திருந்தனர். கிழவிக்கு இடமில்லாமல் இருந்தது. ஒரு 5 நிமிடம் கழித்து, அந்த கிழவி கேட்காமலேயே, கோபாலன் தன்னுடைய இடத்தை அவளுக்கு அளித்து, தான் மீதி 6 மணிநேரமும் நின்றே வந்தான். கோபாலனின் தாய்க்கு தன் மகன் நிற்கிறானே என்று வருத்தமும் கூட.



இப்படி பலவிதத்தில் வித்தியாசமாயிருந்த கோபாலனை அவன் தந்தை பன்முறை ''ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாய்'' என்று கேட்பதுண்டு. அதற்கு அவன் ''யாரை எல்லாம், எவைகளை எல்லாம், எல்லோரும் வெறுத்து ஒதுக்குகிறார்களோ அவர்களை, அவைகளை எல்லாம் நான் நேசிக்க விரும்புகிறேன் என்பான்.

தன் மகனுக்கு ஏதோ மனவியாதி என்று ஸந்தேகப்பட்ட கோபாலனின் தந்தை தன்னூரில் இருந்த ஒரு மஹானிடம் கோபாலனை அழைத்துச் சென்று, அவனைப் பற்றிச் சொல்லி, அவனைத் திருத்துமாறு வேண்டிக்கொண்டார். விஷயங்களை நொடியில் புரிந்துகொண்ட மஹான், ''ஸமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களை சேர்த்து, அரவணைக்காமல் போனால், அந்த ஸமுதாயமே பின்னடைந்து விடும். அவர்களையும் அணைத்தே செல்ல வேண்டும். இந்த கோபாலன் அதற்கு முன்னோடியாய் உள்ளான். பின்னாட்களில் இவன் ஒரு பெரிய மஹாத்மாவாக ஆவான் என்பதில் சந்தேகமேயில்லை'' என்று அவனை ஆசீர்வதித்தார்.

---

## வைகுண்ட ஏகாதஸீ — டிசம்பர் 26ந் தேதி


மஹாரண்யம், மதுரபுரி ஆஸ்ரமத்தில், வைகுண்ட ஏகாதஸீ முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிகள் காலை 4 மணியளவில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு விசேஷ பூஜை செய்தார்கள். காலை 7 மணியளவில் திருமஞ்சனம் முடிந்தபிறகு பக்தர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் தீர்த்த ப்ரஸாதம் தந்தருளினார்கள். அன்று இரவு முழுவதும் மறுநாள் காலை வரை திவ்யநாம கீர்த்தனம் நடைபெற்றது.

மஹாரண்யம் அருகில் உள்ள அமரம்பேடு என்னும் கிராமத்தில், நமது கிராமத்து பக்தர்களால் இரவு முழுவதும் அகண்ட ''ஹரே ராம மஹாமந்த்ரம்'' கீர்த்தனம் செய்யப்பட்டது.

சென்னை ப்ரேமிகபவனத்தில் காலை 4 மணியளவில் தனுர்மாத பூஜையும் காலை 10 மணியளவில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு திருமஞ்ஜனமும் நடைபெற்றன. அன்று மாலை 6 மணியளவில் அத்யயன உத்ஸவமும், இரவு 8 மணி முதல் மறுநாள் விடியற்காலை வரை அகண்ட ''ஹரே ராம மஹாமந்த்ர'' கீர்த்தனம் செய்யப்பட்டது.

# பெரிய பெருமானின் பெருங்கருணை

ஒரு ஸமயம், வைஷ்ணவ ஆசார்யரான ஸ்ரீராமானுஜர் ஸ்ரீரங்கநாதர் கோவிலுக்கு பெருமாளை ஸேவிக்கச் சென்றார். அப்பொழுது, கோவில் கைங்கர்யபரர்களுக்கு ப்ரஸாதம் விநியோகம் செய்யும் இடத்தில் கூச்சல், நிலவுவதைக் கண்டார். அதற்கான காரணத்தை அறிந்து கொள்ள, அவ்விடத்திற்குச் சென்றார். அப்பொழுது அந்த கோவிலில் கைங்கர்யம் செய்யும் ஒருவர் தனக்குக் கிடைத்த ப்ரஸாதத்தின் பங்கு போதாது என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார். ''பகவானிடமே சரணடைந்துள்ள ஒரு வைஷ்ணவனான நீ இப்படி ப்ரஸாதத்திற்காக சண்டை போட்டுக் கொண்டிருக்கலாமா?'' என்று, ஸ்ரீராமானுஜர் அவரிடம் வினவினார். அதற்கு அவரோ, ''நான் முதலில் கல்யாணமாகாத ப்ரஹ்மச்சாரியாக இருந்தேன். கோவிலில் எனக்குக் கிடைத்த ப்ரஸாதத்தின் பங்கு போதுமானதாக இருந்தது. இப்பொழுது நான் குடும்பஸ்தனாகி விட்டேன். ஆகையால், எனக்கு அதற்குத் தகுந்தாற்போல் ப்ரஸாதம் வேண்டுமென்று கேட்டேன். தரமாட்டேன் என்கிறார்கள். அதுவே நான் சண்டை போடுவதற்கான காரணம்'' என்று கூறினார்.



ஸ்ரீ ராமாநுஜரோ அவரிடம் உனக்கு, ரங்கநாதனிடம் நம்பிக்கை உள்ளதல்லவா? என்று வினவினார். அதற்கு அவரோ, ''எனக்குத் தங்களிடம்தான் நம்பிக்கை'' என்று பதில் கூறினார். இதைக் கேட்ட ஸ்ரீ ராமானுஜர், ''அப்படியானால் நீ சண்டை போடாமல் வீட்டுக்குச் செல். உன் குடும்ப பாரத்தை பகவானே வகிப்பான்'' என்று கூறி அனுப்பினார். இந்த ஸம்பவம் நடந்து சில காலமாகிவிட்டது. ஒருநாள் ராமானுஜர், அம்மாமண்டபம் காவேரியில் ஸ்நானம் செய்துவிட்டு திரும்புகையில், அந்த பக்தர் எதிரே வந்து ஸேவித்தார். அவரைப் பார்த்தவுடன் நீ ராமானுஜர், ''குடும்பம் சிரமமில்லாமல் நடக்கின்றதா?'' என்று வினவினார்.

அதற்கு அந்த பக்தரோ, தாங்கள் எனக்கு அருளியபடி தினமும் ஒரு வைஷ்ணவ ப்ரஹ்மச்சாரி பையன் எங்கள் குடும்பத்திற்கு தேவையான ப்ரஸாதத்தை வீட்டிற்கே கொண்டு வந்து தருகிறான் என்று கூற, ராமானுஜருக்கு அப்படி செய்வது பகவான் ரங்கநாதன்தான் என்று புரிந்து விட்டது. பெரிய பெருமாளான ரங்கநாதருடைய கருணையை மனதினால் நினைத்து, ராமானுஜர் உருகிப் போய்விட்டார். ஏனெனில், அந்த பக்தரின் பொருட்டு எந்த ஒரு ஏற்பாடும் ராமானுஜர் செய்யவில்லை. ஆச்சார்யன் அளித்த வாக்கினை பகவானே நிறைவேற்றுவதை இந்தச் ஸம்பவம் நமக்கு தெளிவுபடுத்துகிறது.

---

**மஹோபநிஷத்து - மூன்றாவது அத்யாயம்**

भारो विवेकिनः शास्त्रं भारो ज्ञानञ्च रागिणः । अशान्तस्य मनो भारो
भारोऽनात्मविदो वपुः । यां यामहं मुनिश्रेष्ठ संश्रयामि गुणश्रियम् ।
तां तां कृन्तति मे तृष्णा तन्त्रीमिव कुमूषिका ।

விவேகிகளுக்கு ஶாஸ்த்ரம் ஒரு சுமை, விஷயப் பற்று உடையவர்களுக்கு ஞானம் ஒரு சுமை. அமைதி இல்லாதவர்க்கு மனது ஒரு சுமை. ஆத்மாவை அறியாதவர்க்கு உடல் ஒரு சுமை, முனிஶ்ரேஷ்டரே! குணம் நிறைந்த எதை நான் நாடினாலும் அதையெல்லாம் என்னிடம் எழும் வேறு ஆசை ஒரு வீணையின் தந்தியை கெட்ட எலி கடிப்பதுபோல் துண்டித்துவிடுகிறது.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 6

**- தொடர்ச்சி**

நாவல்கிசோர் முன்பு போல் ஸ்வயம்பாகம் செய்து கொள்ளவில்லை. ஆனால், நந்த கிராமத்து மக்கள் சமைத்ததைத் தவிர வேறு எதுவும் உண்ண மாட்டார். ஒரு ஸமயம், தனது சிஷ்யன் ஜுகல்கிசோருடன் அவர் மதுராவிற்குச் சென்றிருந்தார். சிஷ்யனை பகவானுக்கு ப்ரசாதம் செய்வதற்காக நெய் யாசித்து வர அனுப்பினார். அவன் ஒரு கடைக்குச் சென்று நெய் கேட்டான். கடைக்காரன் வேண்டிய அளவு நெய் கொடுத்தான். சிஷ்யன் என்னிடம் பணமில்லை என்றான். வியாபாரியோ, ''பரவாயில்லை, டாகுர்ஜிக்கு நெய் ஸேவை என்னுடையதாக இருக்கட்டும். உன்னுடைய குருதேவர் பெரிய சித்த புருஷராயிற்றே! எனக்கு புத்திர ஸந்தானம் இல்லை. அவரிடம் சொல்லி எனக்கு க்ருபை செய்யச் சொல்'' என்றார். வெகுளியான ஜுகல்கிஷோர், ''சரி சரி, க்ருபை கிடைத்துவிடும்'' என்று கூறிவிட்டு குருதேவரிடம் வந்து நடந்ததைச் சொன்னான்.

நாவல்கிஷோருக்கு கோபம் வந்து விட்டது. சிஷ்யனை நன்றாக அடித்துவிட்டு, ''க்ருபையை விற்கிறாயா? நாளைக்கு என்னையே விற்பாய். இங்கிருந்து சென்று விடு. என் முன் நிற்காதே!'' என்று கடிந்துகொண்டார். ஜுகல்கிஷோர் அவரது சரணத்தில் வீழ்ந்து அழுதுகொண்டே, ''பாபா! மன்னித்து விடுங்கள். இனி இப்படி செய்ய மாட்டேன். நான் இந்த நெய்யை வியாபாரியிடமே திருப்பித் தந்து விடுகிறேன். என் குருதேவர் உனக்கு ஒன்றும் செய்ய மாட்டார் என்று கூறிவிட்டு வந்து விடுகிறேன்'' என்று கதறினான்.

நாவல்கிசோருக்கு கோபம் தணிந்தது. ''நீ வார்த்தை கொடுத்துவிட்டு வந்து விட்டாயல்லவா! அப்படியென்றால் நந்தலாலா அதற்காகக் கட்டாயம் க்ருபை செய்வான். ஆனால், சிறிதளவு நெய்யைத் தந்துவிட்டு புத்திர ஸந்தானத்தைப் பெற்றுக் கொண்டு அந்த வியாபாரி என்னை ஏய்த்து விட்டானே! நீ போய் அவனிடம் புத்திரன் பிறந்த பிறகு தினமும் நந்தலாலாவிற்கு பன்னீர் கைங்கர்யத்தை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டு வா'' என்றார்.

ஜுகல்கிஷோரும் அப்படியே சென்று இந்த விஷயத்தை நெய் வியாபாரியிடம் கூறினான். அதைக் கேட்ட வியாபாரி அப்பொழுதே மகன் பிறந்து விட்டது போல் ஆனந்தப்பட்டு, உடனேயே, பன்னீர் கைங்கர்யத்தை ஆரம்பித்துவிட்டான். சிறிது நாட்களிலேயே அவனுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. ''நமோ'' என்று பெயர் வைத்து அழைக்கலானான். பிள்ளை பிறந்ததும் அந்த வியாபாரி கற்கள் வியாபாரம் ஆரம்பித்து அந்த கம்பெனிக்கு ''நாவல்கிஷோர் ஜுகல்கிஷோர்'' என்று பெயர் வைத்தான். எத்தனையோ தலைமுறைக்குப் பிறகும் இன்றும் அந்தக் கம்பெனி இதே பெயரில் இயங்கி வருகிறது. நாவல்கிஷோர் எது செய்தாலும் நந்தலாலாவின் ஸேவை ஒன்றுதான் அவர் லக்ஷ்யமாக இருக்கும்.

ஒரு நாள் ஒரு கோஸ்வாமி சிறுவன் பாபாவிடம் வந்து ''பாபா! நீங்கள் சித்த புருஷர் தானே! என் கையில் என்ன இருக்கிறது என்று கூறுங்கள் பார்க்கலாம்'' என்றான். உடனே பாபா, ''சொல்லுவேன். ஆனால் பிறகு நீ நந்தலாலாவுக்கு ஸேவை செய்ய வேண்டும்'' என்றார். சிறுவன் ஒத்துக்கொண்டான். பாபா நந்தலாலாவை த்யானம் செய்தார். கண்ணனின் உதடுகள் சிகப்பாவதைக் கண்டு, ''நந்தலாலாவின் உதடுகள் சிவக்கின்றன, உன் கையில் பிம்ப பழங்கள் உள்ளன'' என்று சரியாகச் சொன்னார். அந்த சிறுவன் பிறகு தன் ஜீவித காலம் முழுவதும் நந்தலாலாவிற்கு தினமும் ஒண்ணேகால் ரூபாய் செலுத்தினான்.

ஸ்ரீ நாவல்கிசோர் நந்தலாலாவிற்கு தினமும் தன் கைகளால் பத்து லட்டு செய்து பூஜாரியிடம் தருவார். காலையில் ''பால்போக்''கின் போது எட்டு லட்டு நைவேத்யம் செய்வார்கள். இரவு இரண்டு லட்டு யசோதாமாவிடம் வைத்து விடுவார்கள், கண்ணனுக்கு இரவு பசித்தால் தருவதற்காக! இன்று வரை இந்த நியமம் நடைபெற்று வருகிறது. நாவல்கிசோருக்கு நந்தலாலாவிடம் வாத்ஸல்ய **பா**வ பக்தி இருந்தது. கடைசியில் ஸ்ரீராதாதேவியின் மஹிமையைப் புரிந்துகொண்டு கண்ணனை காந்தா **பா**வத்தில் உபாசிக்கலானார். நந்திகிராமத்தில் நாவல்கிசோர் பஜனை செய்துவந்த இடத்தில் அவரது ஸமாதி இன்றும் உள்ளது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 76

*ஏமலியிற் கேடாய் நானென்னுறுதியாய்*
*நாடினின் னுறுவேன் அருணாசலா.* - தொடர்ச்சி

சுழுமுனை நாட்டம் என்றொரு ஸாதனை உண்டு. சித்தர்கள் பழகும் ஸாதனை இது. உள்நாக்குக்கு மேல், நெத்திப் பொட்டுக்கு மத்தியில் ஒரு ஜோதி எரிந்த வண்ணம் உள்ளது. இந்த சித்தர்கள் எப்பொழுதும் அதை தரிசனம் செய்தவாறு இருப்பர். அவர்களுக்கு மரணம் என்பதே கிடையாது. அவர்கள் சிரஞ்சீவியாக இருப்பர். அவர்களுக்கு ஸ்நான, பானாதிகளும் தேவையில்லை. குளிக்காமலேயே இருந்தாலும் அவர்கள் உடம்பில் துர்க்கந்தம் வீசாது. அவர்களுக்கு தலையில் நான்கு மாங்காய் சுரப்பி போல் அமைப்பு உள்ளது. அதிலிருந்து ஓர் அமிர்தம் வந்த வண்ணமிருக்கும். அதைப் பருகி ஆனந்தமாயிருப்பர் இந்த சித்தர்கள். இதையே, ''தலம் நான்கினையும் தந்தெனக்கருளி' என்று விநாயகர் அகவலில் ஔவை குறிப்பிடுகிறாள்.

இந்த சித்த புருஷர்கள் ராமரையும், க்ருஷ்ணரையும் நேருக்கு நேர் பார்த்திருப்பர். அவர்கள் இன்றும் உள்ளனர். அவர்களுக்கு இந்த உலகைவிட்டுப் போகவேண்டும் என்ற எண்ணம் கிடையாது. இன்றும் இப்படித்தான் திருவண்ணாமலையில் 18 சித்தர்கள் வாசம் செய்கின்றனர். பர்வதமலையில் உள்ளனர். சென்னையில் கூட சித்தர்கள் உள்ளனர். இந்த சித்தர்கள் வெளியில் ஸஞ்சாரம் செய்து, திரும்பவும், தங்களுடைய யதாஸ்தானத்திற்கு திரும்பி விடுவர். இப்படி இந்த சித்தர்கள் பழகும் சுழுமுனை நாட்டமான ஜோதி தரிசனமும், மாங்காய் சுரப்பிகளில் இருந்து வரும் அமிர்தத்தை பருகுவதும் முடிவான ஸாதனை ஆகாது. சித்தர்கள் அப்படி வாழ ஆசைப்படுகின்றனர் என்பதே சரி.

சித்தர்களும், யோகிகளும் ஆத்ம ஸ்தானத்தை தவறாக புரிந்து கொள்கின்றனர். ஹ்ருதயத்தில்தான் ஆத்மஸாக்ஷாத்காரம் ஏற்படும்

அல்லது அங்குதான் பரமாத்மா வசிக்கிறான் என்பதற்கு ப்ரமாணமாக கமால் என்னும் பக்தரின் சரித்திரத்தை உதாரணமாக சொல்லலாம். கமாலின் சரித்திரம் இந்த உண்மையை விளக்குவதாகவும், வியப்பூட்டுவதாகவும் உள்ளது.

கபீர்தாஸர் என்று ஒரு மிகப்பெரிய மஹாத்மா இருந்தார். ராமபக்தர். 'ராம' நாமத்திலேயே நிஷ்டை கொண்டிருந்த ஸ்ரீ கபீர்தாஸருக்கு அவரைப் போன்றே 'ராம' நாம ஜபத்தில் நிஷ்டை கொண்டிருந்தவராக பிறந்தார் கமால். இளம் வயதிலேயே கமால், ராமநாம ஜபத்தினால் ஸமாதி அனுபவம் கைவரப் பெற்றிருந்தார். பகவத் பக்தியினால் மட்டுமே இது கமாலுக்கு ஸாத்யமானது.

கமாலுக்கு ஸமாதி அனுபவமானது நன்கு கைவரப்பெற்று இருந்தது என்று ஒரு ஸம்பவத்தின் மூலம் தெள்ளத்தெளிவாக தெரிகிறது. கமாலும் அவரது நண்பனும் சிறுவயதில் கோலி விளையாடுவது வழக்கம். அதில், ஒரு ஸமயம், கமால் தோற்பதுண்டு. வேறொரு சமயம், கமாலின் நண்பன் தோற்பதுண்டு. அவர்கள் தங்களுக்குள், ''நீ இத்தனை முறை தோற்று விட்டாய். நாளை எனக்கு இவ்வளவு ஆட்டம் நீ தரவேண்டும்'' என்று பேசி வைத்து கொள்வர். ஒருநாள், கமாலின் நண்பன் தோற்றுப் போக, கமால் தனக்கு வரவேண்டிய 3 ஆட்டத்தை திருப்பி கேட்பதற்காக நண்பனின் வீட்டிற்குப் போனார். அங்கோ, அவரது சிநேகிதன் இறந்து போயிருந்தான். அவனுடைய உறவினர்கள் அனைவரும் அவனது உடலைச் சுற்றி அமுதவண்ணமிருந்தனர்.

கமாலுக்கு ஒன்றும் புரியவில்லை. நேராக, கமால் தனது நண்பனின் உடலருகே சென்று, ''கோலி ஆட்டம் பாக்கி உள்ளது. ஆட வா'' என்று அழைத்தார். மற்ற பெரியவர்கள், அவரிடம், ''அவன் உயிர் போய்விட்டது. அவன் இனி பேசமாட்டான்' என்று கூறினர். அதற்கு கமாலோ, இது ஒன்றும் எனக்கு புதிது இல்லை. இப்படி உடம்பு கல்லாக கிடப்பது என்பது எனக்கு பலமுறை வந்துள்ளது. அதன்பின், பன்முறை நான் விளையாட வந்துள்ளேன். இவன் மட்டும் ஏன் படுத்துக்கொள்ள வேண்டும்?'' என்று வினவினார்.

ஸ்வாமி விவேகானந்தர் சின்ன குழந்தையாக இருந்தபொழுது, பள்ளிக்கூடத்தில் அவரை கூப்பிட்டு லெக்சர் கொடுக்க சொன்னார்கள். அவர் அந்த லெக்சரில் என்ன பேசினார் என்றால், ''நமது புருவமத்தியில் எப்பொழுதும் ஒரு ஜோதி எரிந்து கொண்டிருக்கிறது, அல்லவா'' என்று பேசிவிட்டார். காரணம், அவருக்கு அது அனுபவம். அது தனக்கு அனுபவம் என்று மட்டுமல்லாமல், மற்றவருக்கும் அதே அனுபவம் உள்ளது என்று நினைத்துவிட்டார். அதுபோலவேதான், கமாலும், தனது அனுபவமும் தன் நண்பனின் அனுபவமும் ஒன்றாகத்தான் இருக்கும் என்று நினைத்துவிட்டார்.

கமால், ''எனக்கு உடம்பு, இப்படித்தான் சில்லிட்டு போய் விடும். அப்பொழுது யார், என்னை எழுப்பினாலும் எழுந்து கொள்ள மாட்டேன்.'' என்று பேசிக்கொண்டே அப்படியே படுத்து கொண்டார். அவ்வளவுதான். அவரும் ப்ராணனை விட்டது போல் ஆகிவிட்டார். மற்ற அனைவருக்கும் பயமாகி போய்விட்டது. கமாலை தட்டி பார்த்தனர். பேச்சு, மூச்சில்லை. எல்லோரும் அழ ஆரம்பித்து விட்டனர். சட்டென்று கமால் மறுபடி எழுந்து விட்டார். அதாவது, சிறிது நாழிகை ஸமாதிக்கு சென்றுவிட்டு, திரும்பி வந்து விட்டார். ''என்னுடைய சரீரம் இறந்துபோனாலும், ஆத்மாவான நான் எப்பொழுதும் இருந்துகொண்டு இருக்கிறேன்'' என்று சொல்லி, தனது சக்தியினால் அவர் தனது நண்பனையும் எழுப்பி விட்டார்.

(தொடரும்)

## நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**ஜனவரி 2-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை**

சென்னை தி.நகர் தக்ஷிண பாரத ஹிந்தி ப்ரசார சபாவில், க்ஷிப்ர ப்ரஸாத கணபதி ட்ரஸ்ட் சார்பில் ஸ்ரீஸ்வாமிகள் இரவு 7 மணி முதல் 9 மணி வரை ''பக்த விஜயம்'' பற்றி உபன்யாஸம் செய்கின்றார்கள்.

**பிப்ரவரி 17-ந் தேதி**

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாள் திருகோயில் ஸம்ப்ரோக்ஷணம் ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெறும்.

**மங்களானி பவந்து**

## செய்திகள்

### நவம்பர் 27-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் இரவு 7 மணியளவில், பாடசாலை வித்யார்த்திகள் உபநிஷத் பாராயணத்துடன் துளஸீ கல்யாணம் நடைபெற்றது. ஸுவாஸினி பூஜைக்கு பிறகு துளஸீ தேவி மீது கீர்த்தனங்கள் பாடப்பட்டன. பிறகு, ஸ்ரீ ஸ்வாமிகள் திவ்யநாமஸங்கீர்த்தனம் செய்தார்கள்.

### நவம்பர் 28-ந் தேதி

சென்னை தாம்பரம் ஸ்ரீ சங்கர மேல்நிலைப் பள்ளிக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் விஜயம் செய்து பள்ளிக் குழந்தைகளை அனுக்ரஹித்தார்கள்.

### நவம்பர் 30-ந் தேதி

கன்யாகுமரி காணிமடத்தில் நடைபெற்ற யோகி ராம்சுரத்குமார் ஜயந்தி மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள்.

### டிசம்பர் 1-ந் தேதி

சென்னை அடுத்துள்ள கொளத்தூர் ராகவாஶ்ரமத்தில், நடைபெற்ற பகவான் யோகி ராம்சுரத்குமார் அவர்களின் ஜயந்தி மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டு பகவன்நாம மஹிமை பற்றி ப்ரவசனம் செய்தார்கள். மாலை 7 மணியளவில் மயிலாப்பூர் ஸ்ரீ பாலகுமாரன் க்ருஹத்தில் யோகி ராம்சுரத்குமார் ஜயந்தியையொட்டி நடைபெற்ற பஜனையில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள்.

### டிசம்பர் 8-ந் தேதி

சென்னை நங்கநல்லூர் ஸ்ரீ குமார ஸ்வாமி அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற திவ்யநாம கீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டு அபங்க கீர்த்தனங்களை பாடினார்கள்.

### டிசம்பர் 11-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் இரவு 8 மணியளவில் மஹான் யோகி ராம்சுரத்குமார் அவர்களுடைய வெளிநாட்டு பக்தர்களின் நாமகீர்த்தனம் நடைபெற்றது. அமெரிக்காவை சேர்ந்த ஸ்ரீ LOZOWICK அவர்கள் பகவான் யோகி ராம்சுரத்குமாரைப் பற்றி தனது அனுபவத்தை பேசினார்கள்.

### டிசம்பர் 14-ந் தேதி — கார்த்திகை அமாவாஸ்யை

ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாளின் கங்காகர்ஷணத்தை முன்னிட்டு சென்னை ப்ரேமிகபவனத்தில் அன்னதானம் செய்யப்பட்டது. இரவு ஸ்ரீ ஸ்வாமிகளின் திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. பிறகு ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாளைப் பற்றி ப்ரவசனம் செய்தார்கள். மதுரபுரி ஆஶ்ரமத்திலும் அன்னதானம் செய்யப்பட்டது.